
| வ.எண் | சர்வே எண் | பரப்பளவு (ஹெக்டேர்) |
|---|---|---|
| 1. | 505/4 | 0.45.50 |
| 2. | 505/5 | 0.39.50 |
| 3. | 505/6ஏ | 0.39.82 |
| 4. | 506/1 | 0.45.50 |
| மொத்தம் | | 1.70.32 |




# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கன்னியாகுமரி மாவட்டம்.

## ராமபுரம் ஊராட்சி (மலையிட பாதுகாப்பு குழுமப்பகுதி)

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் உள்ளூர் திட்டக் குழுமம், அகஸ்தீஸ்வரம் வட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், ராமபுரம் ஊராட்சி, ராமபுரம் கிராமம், சர்வே எண்கள்: 505/4,5,6ஏ மற்றும் 506/1 ஆகியவற்றில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம்.

(திட்டப் பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: 521RS7JO/2025

அளவு : 1:500

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | - | |
| நிலையிலுள்ள சாலை / அணுகுசாலை | - | |

குறிப்பு:

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | - | 17032.00 ச.மீ (4.21ஏக்கர்) |
| உத்தேச மனைப்பிரிவு சாலை (ம) மூலை முடக்குகளின் பரப்பு | - | 4700.57 ச.மீ |
| மீதமுள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | - | 12331.43 ச.மீ |
| கோரிய மனைகள் | - 87 | |
| ஒதுக்கப்படும் மனைகள் | - 87 | |
| ஒதுக்கப்படும் EWS மனைகள் | - 20 (மனை எண்கள்: 6-12 மற்றும் 28-40) | |
| EWS மனைகளின் பரப்பளவு | - 1315.70 ச.மீ - (10.67%) | |

அரசாணை எண்: 18 ந.நி(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்: 04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்: 4367/2019-பிஏ-2. நாள்: 05.02.2020, CASE-V-ன்படி தேவைப்படும் பூங்கா பரப்பு - 1233.14 ச.மீ

பொது ஒதுக்கீடுகள்:

1. உத்தேச மனைப்பிரிவு சாலை (ம) மூலை முடக்குகளின் பரப்பு - 4700.57 ச.மீ
2. ஒதுக்கப்படும் பூங்கா பரப்பு - 1304.42 ச.மீ - (10.58%)

பொது உபயோகம்: (TNCDBR-2019, விதி-47(8)-ன்படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட 1% ஒதுக்கீடு)

3. உள்ளாட்சி உபயோகத்திற்கு - 68.24 ச.மீ - (0.55%)

(நன்கொடை ஆவண எண்: 3763/2025, நாள்: 11.09.2025-ன் படி ராமபுரம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது)

4. தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக உபயோகத்திற்கு (TANGEDCO) - 68.74 ச.மீ - (0.56%)

(தான ஆவண எண்: 3763/2025, நாள்: 11.09.2025-ன் படி தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது)

மூலை முடக்கு:

12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்: 18 ந.நி.(ம)கு.வ.(ந.ப.1)துறை நாள்:04.02.2019, அரசாணை எண்:16 ந.நி.(ம)கு.வ (ந.ப.1) நாள்:31.01.2020-ன்படியும் நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019/பிஏ2. நாள்:05.02.2020 மற்றும் அரசாணை எண்: 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020-ன்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள், மூலைமுடக்குகள், பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உபயோக ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் அரசாணைகளின்படி உத்தேச சாலைகளை நிரந்தரமாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் தார்ச்சாலையாகவும் தேவையான அமப்பினை வசதிகளை இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பின் அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கும் முன், இடத்தில் எந்த துறையாலும் நில ஆழ்நிலை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்பின்றி இத்துறையால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றும் விடுதலின்றி மனைப்பிரிவு துணுவாயிலில் ஏச அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
6. குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான EWS மனைகள் : 6-12 மற்றும் 28-40 வரையிலான மனைகளை மனை உட்பிரிவு / மனை உபயோக மாற்றம் / மனை ஒருங்கிணைப்பு செய்தல் கூடாது. மேலும் 9.00மீ சாலையில் அமையும் EWS மனைகளுக்கு கட்டட வரம்பு 1.00மீ பொருந்தும்.
7. வனத்துறை, கனிமம் (ம) கரங்கத்துறையின் தடையின்மை சான்றுகள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், வேளாண்மை இணை இயக்குநர் ஆகியோரின் குறிப்புரைகளின் அடிப்படையில், இம்மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.
8. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்றுச்சுவர் எழுப்புதல் கூடாது.
9. The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority.

குறிப்பு

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது

SWP/ ம.வ / நா.உ.தி.கு.எண் : **46 / 2025**

திட்ட அனுமதி எண் : **58 / 2025**

அளவர் / உதவி இயக்குநர்

வரைவாளர் நிலை - III

மேற்பார்வையாளர்

உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர்
நாகர்கோவில் உள்ளூர். திட்டக்குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்